மாலை மணி

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 21-7-54 | மணி 31

தப்பான - தவறான - பொய்யான செய்தி!

திருவாங்கூர் கிளர்ச்சி பற்றி கடிதமும் வரவில்லை - பதிலும் எழுதவில்லை

'தினத் தந்தி'யின் - பொய்யான செய்திக்கு அறிஞர் அண்ணாவின் மறுப்பு!

"தினத் தந்தி" என்னும் செய்தித்தாள் சில தினங்களாக செய்திகளைத் திருத்தியும் குறைத்தும் வெளியிட்டு வந்திருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனையே கடிக்க ஆரம்பித்து விட்டது, என்ற நாடோடிப் பழமொழிக்கிணங்க தி. மு. க. வைத் தாக்கி, முழுப் பொய்யான செய்திகளை வெளியிடும் அளவுக்கு தினத் தந்தி இப்பொழுது இறங்கிவிட்டிருக்கிறது, பொது உடமைக் கட்சிக்கு ஆக்கம் தேட வேண்டும் என்ற நோக்கத்தில் சில தினங்களாக தி, மு. கழகத்திற்கும் அதன் தலைவர்களுக்கும் இழுக்கு உண்டாகும்படி, இல்லாத ஒன்றை உருவாக்கி அதை பெரிய பெரிய கொட்டை எழுத்துக்களில் தலைப்புத் தந்து வெளியிட்டு வருகிறது. இது பத்திரிகை தர்மத்திற்கு மாறுபட்டதென்பதை அதன் ஆசிரியர் அறியாமற்போனதற்கு நாம் மிகவும் வருந்துகிறோம்.

சில நாட்களுக்கு முன்பு 'பிள்ளையார் கோவில் திறப்பு விழா - அண்ணாதுரைக்கு அழைப்பு' என்ற செய்தியை வெளியிட்டது — அது பொய்யான செய்தி என்று மறுக்கப்பட்டதும் இருட்டுக் கடிதமொன்றை சிருஷ்டித்து பிள்ளையார் கோவிலுக்கு அஸ்திவாரக் கல் நாட்ட அண்ணாதுரைக்கு அழைப்பு என்று மாறி புதிய செய்தியொன்று வெளி வந்தது. அது எவ்வளவு அயோக்கியத்தனமான செய்தி என்பதை அம்பலப்படுத்தியபிறகும் தினத் தந்தியார் தனது "சாக்கடை ஜர்னலிசத்தை" மறுபடியும் விட்டபாடில்லை. திருவாங்கூர் போராட்டத்தைப் பற்றி அண்ணா அவர்கள் தமிழர் காங்கிரஸ் கட்சிக்குக் கடிதம் எழுதியதாக ஒரு பொய்யானச்செய்தியை 19-7-54 அன்று வெளியிட்டுள்ளது. இந்த செய்தி முழுமையும் பொய்யானது என்று அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள மறுப்புச் செய்தியை அடியில் தந்துள்ளோம். வாசகர்களுக்கு தினத் தந்தி தப்பான, தவறான — பொய்யான செய்திகளையே வெளியிட்டு வயிறு வளர்க்கிறதென்பதை நாம் எடுத்துக் காட்டாமலே விளங்குமென்று நம்புகிறோம்,

அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டபடி 'தினத் தந்தி' யின் இச்செயலை திராவிடர் ஒவ்வொருவரும் கண்டிக்க வேண்டுமென்றே நாமும் அபிப்பிராயப்படுகிறோம். பொது மக்களின் ஏகோபித்த கண்டனத்தாலும் — பகிஷ்காரக் கிளர்ச்சியினாலுமே இத்தகைய இழிகுணம் படைத்த தினத்தாள்களின் கொட்டத்தை அடக்க முடியும் என்று நம்புகிறோம்.

அறிஞர் அண்ணாவின் உண்மை விளக்கம்

திருவாங்கூர் தமிழர்கள் நடத்தும் அறப்போர் குறித்து எனக்கு எழுதி ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு நான், மலையாளியான பட்டம் தாணுப்பிள்ளையுடன் போராட வேண்டாம், டில்லியுடன் போராடுங்கள் என்று யோசனைக் கூறிக் கடிதம் அனுப்பியதாகவும், திருவாங்கூர் தமிழர் தலைவர் ஒருவர் கூறியதாக, 'தினத் தந்தி'யில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இது கலப்படமற்ற முழுப் பொய் என்பதை அனைவருக்கும் கூறிக் கொள்கிறேன். திருவாங்கூர் தமிழர்களின் அறப்போர்குறித்துஎனக்கு ஒரு கடிதமும் வரவில்லை; நான் 'தினத் தந்தி' யில் வெளியிடப்பட்டது போன்ற கருத்தை வெளியிட்டதுமில்லை.

திருவிதாங்கூரில் தமிழர்கள் நடத்தும் அறப்போர் குறித்து நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் ஜான் அவர்கள், என்னிடம் எடுத்துக்கூறினார். பொதட்டூர் பேட்டை தி. மு. கழக மாநாட்டில் மேற்படி அறப்போரை ஆதரித்தும், அடக்கு முறையைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம் அறப்போரை ஆதரித்தும் வருகிறது ;— உண்மை இது.

ஆனால் 'தினத் தந்தி' யில் முழுவதும் பொய்யான ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. பொது மக்கள் ஏற்கனவே, தினத் தந்தியின் போக்கை நன்றாக அறிந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட அபத்தச் செய்திகளைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்ற போதிலும், உண்மையை மக்கள் அறிவதற்காக இந்த விளக்கத்தை வெளியிட்டிருக்கிறேன்.

பொது மக்களுக்கு இப்படிப் பொய்ச் செய்திகளைத் தந்து பொது வாழ்வுத் துறையையே இழுக்குடையதாக்கும் 'தினத் தந்தி' யின் போக்கைப் பொறுப்புணர்ந்தோர் அனைவரும் கண்டிப்பர் என்று நம்புகிறேன்.

அன்பன்.

அண்ணாதுரை

அளவுக்கு மிஞ்சிய சாமான் கப்பல்கள்

பம்பாய் துறைமுகத்தில் திணறல்

பம்பாய், ஜூலை 20—

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு, இதுவரை கண்டிராத அளவுக்கு ஏராளமான சாமான் கப்பல்கள் பம்பாய் துறைமுகத்திற்கு வந்திருக்கின்றன. துறைமுக அதிகாரிகள் அவற்றைச் சமாளிக்க முடியா வண்ணம் திணறுகின்றனர், துறைமுகத்தில் இப்பொழுது 50 கப்பல்கள் நின்றுகொண்டிருக்கின்றன. மேலும் 34 கப்பல்கள் நடுக்கடலிலிருந்து உள்ளே வரக் காத்துக்கொண்டிருக்கின்றன. எவ்வளவு துரிதமாக வேலை செய்தாலும், நாளொன்றுக்கு ஏழெட்டுக் கப்பல்களுக்கு மேல் காலிசெய்து அனுப்ப முடியவில்லையாம்!

ஸ்ரீ பெரும்புதூரில் கார் விபத்து !

சென்னை என்ஜினீயர் பலி

சென்னை, ஜூலை. 19—

சென்ற ஜூலை 16-ந் தேதியன்று சென்னை வல்கன் டிரேடிங் கம்பெனியின் என்ஜினீயரான தோழர் ஜி, சி. வனியா (40) பலத்த காயங்களுடன் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்தார்.

அவர் காஞ்சியிலிருந்து வந்த கார் ஸ்ரீ பெரும்புதூர் அருகே ஒரு திருப்பத்தில் ஒரு மரத்தின் மீது மோதியதன் காரணமாக ஏற்பட்ட விபத்தின் எதிரொலி தான் இவரது மரணமாகும்.

கார் டிரைவரும், என்ஜினீயரும் விபத்துக்குள்ளாகி மயக்கமுற்றுக்கிடந்தனராம். இதைக் கண்ட ஒரு பஸ்கண்டக்டர் இவர்களை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தாராம். கார் டிரைவர் குணமாகி வருவதாகத் தெரிகிறது.

திருவாங்கூர் - தமிழக இணைப்புக் கிளர்ச்சி

தி. மு. க. பங்கு கொள்ளும் ?

தலைவர்களுடன் ஆலோசனை

நாகர்கோயில், ஜூலை, 20—

சில தினங்களுக்குமுன் இங்கு முனிசிபல்மைதானத்தில்தோழர் வி, எம். ஜான் அவர்கள் தலைமையில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது,

தி. மு. க. தலைவர்களைக் கலந்து கொண்டு தி, த. நா. காங்கிரஸ் தலைவர்கள் விடுதலையானதும் அவர்களையும் கலந்து ஆலோசித்த பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் திருவாங்கூர் — தமிழக இணைப்புக் கிளர்ச்சியில் பங்கு கொள்ளும் எனக் கூட்டத்தில் பேசினர்,

இரண்டாயிரம் பேர் கைது

இலட்சுமணபுரி, ஜூலை 20—

உத்திர பிரதேசத்தில் பிரஜா சோஷலிஸ்டுகள் நீர்ப்பாசன வரியை எதிர்த்து நடத்தி வரும் கிளர்ச்சியில் இதுவரை இரண்டாயிரம் பேர் கைதாகி இருப்பதாக உத்தர பிரதேச பிரஜா — சோஷலிஸ்டுகள் தலைமை நிலையம் தெரிவிக்கிறது.

மாலைமணி

சென்னை 21—7—54

அப்பனே! ஒதுங்கியே நில்!

குடியாத்தம் தேர்தல் இன்னும் பத்தே நாட்கள் இருக்கின்றன. தோழர் காமராஜர் ஆட்சிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திலேயே, திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, ஆரியத்தின் காவலரான அன்பர் ஆச்சாரியாரால் செய்யப்பட்ட கேடுகளைத் துடைக்கும் தூய பணியிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். திராவிடரின் கண்களைப் பிடுங்க ஆச்சாரியார் ஐம்பதாண்டுகளாக ஆலோசித்துக் கொண்டுவந்த வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தை, தோழர் காமராஜர் ஆட்சிக்கு வந்த உடனே சுக்குநூறாகக் கிழித்து குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து விட்டார். ஆகவே தம் இன மக்களின் ஆதாவிற்கும் அன்பிற்கும் அவர் சலபத்தில் பாத்திரமாகி விட்டார். எனவே குடியாத்தம் தேர்தலில் அந்த ஆற்றல் வீரர் வெற்றிக்காண வேண்டி, கட்சி வேறுபாடின்றி எல்லாத் திராவிடர்களும் வேலை செய்து வருகின்றனர்.

“காமராஜருக்கு எதிரிடையாக வேலை செய்து அவர் ஆட்சியைக் கவிழ்த்துவிட ஏதேதோ திட்டங்கள் தயாரித்தோமே—அய்யோ, அவையெல்லாம் இப்பொழுது தவிடுபொடியாகி விட்டனவே! ஆதரவு கம்யூனிஸ்டு உறுப்பினருக்குத் தந்து, ஆரிய வைரியான காமராஜரை மண் கவ்வச் செய்து, ‘பாரும் காமராஜரை மக்கள் விரும்பவில்லை!’ என்று துஷ்பிரசாரம் செய்து, நம் ராஜாஜியையே திரும்பவும் கோலேந்தச் செய்யலாமென்று மனக்கோட்டை கட்டினோமே! அந்தோ, அந்த மனக்கோட்டை மண்மேடாகி விட்டதே! இந்தத் திராவிடரைத் தனித் தனியாகப் பிரித்து விடவும், அவசியம் ஏற்படும்போது ஒருவர் மீது ஒருவரை ஏவ விடவுமான நிலைமையை, இந்த நாட்டிலே ஏற்படுத்த நம் முன்னோர்கள் எவ்வளவு அரும்பாடு பட்டார்கள்? மனு என்ன, யாஸ்ஓவல்கியர் என்ன சாமான்யர்களா? இந்தச் சண்டாளர்களின் வாழ்வைப் பறித்து, வளமாக நாம் வாழ எவ்வளவு ஏற்பாடுகளைச் செய்து வைத்து வைத்துவிட்டுப் போயினர்? சாணக்கியர் வம்சத்தில் உதித்த நம் ராஜாஜி என்ன, சாதாரண கோயில் புரோகிதரா? இல்லையே! எல்லாத் துறைகளிலும் நம்மவர் ஆதிக்கம் நிலைத்து நிற்க கங்கணம் கட்டிக் கொண்டல்லவா பாடுபட்டார்! இந்தத் திராவிட அசுரக் கூட்டத்தை நிர்மூலமாக்கச் சாதுபோல வேடமிட்டு, சகல வழிகளையும் கையாண்டார் அல்லவா? இப்பொழுது நிலைமை என்ன ஆயிற்று? எல்லாம் தலைகீழாக மாறி விட்டதே! காமராஜர்—ஆமாம், அந்த நாசகாலனை நம்மினத்தின் ஜோதியே, துயர் துடைக்க வந்த தூயமணியே என்றல்லவா போற்றிப் புகழ ஆரம்பித்து விட்டார்கள்? சிதறிக் கிடந்தகள் ஒன்றாகி விட்டனவே! இனி என்ன நடக்குமோ? நம் வாழ்வு என்னாகுமோ? கண்களில் இருள் கப்புகிறதே—கருத்தில் தெளிவாக ஒன்றும் தோன்றவில்லையே! சரி! ஏதாவது நடிப்பில் இறங்க வேண்டும்—இல்லையேல் நாம் நாசமாகி விடுவோம்! காமராஜரை ஆதரிப்பதாக நடிப்போம்—காலம் வரட்டும்—வராமலா போகும்—அப்பொழுது அவர் காலைவாரி விட்டு விடலாம்!” என்ற சித்தக் குழப்பத்தோடு இப்பொழுது ஆரியம் ஒரு முடிவு செய்து விட்டது! ஆமாம் தேர்தலில் காமராஜரை பிராம்மண மகாசபை ஆதரிக்கப் போகிறதாம்! அந்த ‘நல்லெண்ணத்தை’ நாடறிய ஒரு அறிக்கையும் விட்டிருக்கிறது!

குடியாத்தம் தேர்தலுக்காக மாதக் கணக்கில் பிரசாரம் நடைபெற்று வருவதும், காமராஜரை ஆதரிப்பதாகப் பெரிய கட்சிகள் மட்டுமல்ல, ஊர்பேர் தெரியாத சின்னஞ்சிறு சங்கங்களெல்லாம் அறிக்கைகள் விடுத்ததும், நாடறிந்த செய்தியாகும்.

இவ்வளவு நாட்களாக மௌனமாக இருந்து விட்டு, தேர்தல் இன்னும் பத்தே பத்து நாட்களேயிருக்கும் இந்தக் குறுகிய காலத்தில், பிராம்மண மகாசபை காமராஜரை ஆதரித்து அறிக்கை விடும் சூட்சுமம் என்ன?

ஆச்சாரியாரை மூலையில் உட்கார வைத்து விட்ட காமராஜரைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற ஆத்திரத்தில், பார்ப்பனர் இருந்து வந்தனர். இந்தத் தேர்தலில் ஏதாவது சதி செய்து, அவரைக் கவிழ்த்துவிட திட்டமிட்டனர். ஆனால் இன்று காமராஜருக்கு இருக்கும் பெருத்த ஆதரவைக் கண்டும், அவர் வெற்றி பெறப்போவது நிச்சயம் என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டும், நாங்களும் அவர் வெற்றியடைய பாடுபடப் போகிறோம் என்று பார்ப்பனர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்!

“பிராம்மணர்களுக்கு நீங்கள் ஒரு மந்திரிப் பதவி கொடுக்க [illegible] எங்களுக்கு மனவருத்தமே இல்லை. கோபமும் கிடையாது. ஆத்திரமும் ஏற்படவில்லை!” என்று சென்னை மாநில பிராம்மண மகாசபையின் பொதுச் செயலாளரான எல். எஸ். மணி அய்யர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்! இதை உண்மை என்று ஏமாளிகூட நம்பிவிட மாட்டான். ஆச்சாரியாரை ஒழித்ததில் காமராஜர் மீது அக்கிரகாரத்திற்கு எவ்வளவு ஆத்திரம், மந்திரி சபையில் ஒரு ஆரியனுக்குக் கூட இடம் தராததினால் அவர்மீது எவ்வளவு கடுப்பும் கடுஞ்சினமும் என்பதை நாம் நன்கறிவோம்! அய்யர் கூறும் இந்த ‘பெருந்தன்மை’யை நம்பிவிட, இன்று நாட்டில் ஆள் இல்லை!

“நிச்சயம் பூர்ண ஜெயம்தான். தைரியமாக இருங்கள். குடியாத்தம் தேர்தலில் எல்லாப் பிராம்மணர்களின் வோட்டுகளும் உங்களுக்குத்தான். நானும் இதுபற்றி பிராமண வோட்டர்களுக்கு எழுதியிருக்கிறேன்!” என்று அந்த அறிக்கையில், காமராஜருக்கு அய்யர் தைரியம் கூறுகிறார்! அய்யோ பாபம், நிலைமை தெரியாமல் ஏதோ கூறுகிறார்! போகட்டும்!

பார்ப்பனர் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும், காமராஜர் வெற்றி பெறப் போவதென்னமோ நிச்சயம்! இந்த அய்யரின் ஆசியினாலும் ஆதரவினாலுமே வெற்றி பெறவேண்டிய அவல நிலைமையில் இன்று காமராஜர் இல்லை!

அறிக்கை விடுத்த அப்பனே! நீ ஒதுங்கியே நில்! காமராஜர் வெற்றி பெறுகிறாரா இல்லையா என்பதைப் பார்! பிறகாவது தெரிந்து கொள், இன்று திராவிடர் பெற்றிருக்கும் ஒற்றுமையை!

ஆந்திரா நிலச் சீர்திருத்தக் கமிட்டி

செயலாளர் பதவியேற்றார்

கர்நூல், ஜூலை. 19—ஆந்திர சர்க்கார் சமீபத்தில் ஏற்படுத்தியுள்ள நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் செயலாளராக டாக்டர், வி. வி. சாயணு அவர்கள் ஜூலை 17-ந் தேதியன்று பதவியேற்றார்.

இக் கமிட்டி நிலச் சீர் திருத்தங்கள் சம்பந்தமான பரிசிலனைகளைச் செய்து ஆறு மாதங்களுக்குள் தங்கள்முடிவான அறிக்கையைத் தயார் செய்துவிடுவார்கள் எனப் பதவியேற்ற செயலாளர் டாக்டர் சாயணு தெரிவித்தார்.

அனாதைக் குழந்தைகள் பாதுகாப்பு

டாக்டர் ஏ இலட்சுமணசாமி அறிவுரை

சென்னை. ஜூலை, 20—அனாதைக்குழந்தைகளைப் பாதுகாக்கும் பாலவிஹார், சென்னைப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர், ஏ. இலட்சுமணசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. டாக்டர், இலட்சுமணசாமி அவர்கள் பேசுகையில் சமூகத்தின் முதன் வேலை குழந்தைகளைப் பாதுகாப்பதேயாகும் என்று குறிப்பிட்ட, குழந்தைகளை கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

குழந்தைகள் பெற்றோரின் தனிச் சொத்தாக மட்டும் எண்ணிவிடக்கூடாது என்றும் குழந்தைகளின் நல்வாழ்வைப் பொறுத்துத்தான் சமூகம் நன்மை மதீமைகளை அடைகிற தென்றும் தெரிவித்தார்.

இளமையிலேயே பாது காப்பார் இன்றித்திரியும் அனாதைக் குழந்தைகளைச் சமூகம் கவனித்து நல்ல முறையில் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இன்றேல் அனாதைக்குழந்தைகள் தீய வழியில் சென்று சமூகத்திற்குப் பெருந்தீங்கு விளைவிப்பர் எனவும் எச்சரித்தார்.

ஜூலை-15

நாடெங்கும்விழா கொண்டாடினர்

சென்னை, ஜூலை. 20—திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கைக்கிணங்க, திராவிடமெங்கும் ஜூலை-15 மும்முனைப் போராட்ட முழக்க நாள் மிகச்சிறப்புடனும், குதூகலத்துடனும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ஆங்காங்கு நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டச் செய்திகள் அடியில் தரப்பட்டுள்ளன,

சென்னை

சூளை சௌந்தரபாண்டியன் நினைவுப்படிப்பகச் சார்பில் தோழர் மு. கன்னியப்பன் தலைமையில் 16-7-54 அன்று மாலை மும்முனைப் போராட்ட நாள் பற்றிப்பலர் சொற்பொழிவாற்றினர்.

மாரண்டள்ளி

மும்முனைப் போராட்ட நாளன்று பலவிடங்களில் கொடியேற்றப்பட்டு, ஊர்வலமொன்றும் நடைபெற்றது. பிறகு தோழர் ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வி. நாராயணசாமி, பசவராசன், இலட்சுமணன், நீலமேகம் ஆகியோர் பேசினர்.

மதுரை

பாண்டிய வேளாளர் தெரு, இளங்கோ மன்றததில் 15-ந் தேதி காலை தேழேர் மு. சந்தானம் கழகக்கொடியை ஏற்றி வைத்தார்.

திருத்துரைப் பூண்டி

ஊர்ப்பொது இடத்தில் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டு, ஜூலை பதினைந்து கொண்டாடுவதின் நோக்கம்பற்றி விளக்கப்பட்டது, கூட்டத்தில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன

கல்லக்குடி

15-7-54 ல் தோழர் அ. தம்புசாமி, தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அதியமான், செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்

வேலையிழப்பைத் தடுக்க...?

முதலாளிக்கு தொழிலாளர் உதவி!

நியூயார்க், ஜூலை. 20—

தொப்பி தயாரிக்கும் அமெரிக்கா கம்பெனி ஒன்று நிதி நிலைமைக் கோளாறினால் மூடுவதாக இருந்தது. தொழிற்சாலையை மூடிவிட்டால் பல தொழிலாளர்கள் வேலையிழப்பைத் தவிர்ப்பதற்காக தொப்பித் தொழிலாளர் சங்கம் கம்பெனி முதலாளிகட்கு இரண்டரை இலட்சம் டாலர் கடன் கொடுக்கத் தயார் என்று தெரிவித்துள்ளது. தொழிற்சாலை மூடப்படாமல் தொடர்ந்து இதனால் நடைபெறுமென்று தெரிகிறது.

... ...

பள்ளியில் "சமையல் வகுப்பு" ஆரம்பிக்கப்பட்டது

பம்பாய், ஜூலை, 19—

புத்தகப் படிப்போடு மட்டும் நில்லாமல், குறிப்பாகப் பெண் குழந்தைகளின் வாழ்க்கைக்கேற்ற முறையில், பிற்காலத்தில் உபயோகப்படும் படியாய் சமையல் முறை, சிசு சம்ரட்சணை முதல் உதவி, குடும்பப்பரிபாலனம் போன்ற துறையில் பயிற்சி அளிப்பதற்கென, புது வகுப்பு ஒன்று மாதுங்கா முனிசிபல் உயர்தர ஆரம்பப் பள்ளியில் 17-7-54 சனிக்கிழமையன்று பம்பாய் முனிசிபல் கல்வி அதிகாரி குமாரி கபிலா காந்துவாலா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அது போது பம்பாய் முனிசிபல் கல்வி இலாகா சூப்பிரண்டென்டென் பெவினட்கர் அவர்களும் உதவி சூப்பிரண்டென்டென்ட் எஸ், நடராஜன் அவர்களும் கலந்து கொண்டார்கள். மணவிகளால் உயரிய முறையில் தயாரிக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் விருந்தளிக்கப்பட்டன. கல்வி அதிகாரி குமாரி கபிலா காந்துவாலா அவர்கள் இவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் பற்றியும் இப்பயிற்சியின் அவசியம் பற்றியும் விளக்கமாகப் பேசினர்.

கேளிக்கை வரிவசூல்

....

நகரசபைக்கு சர்க்கார் கைவிரிப்பு

சென்னை, ஜூலை, 20—

கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்குமுன் சர்க்கார் நகரசபையைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும், கேளிக்கை வரி வசூலுக்காகச் சர்க்கார் பெறும் பத்து சத விகிதத்தை இரண்டரை சத விகிதமாகக் குறைக்க வேண்டுமென்றும் நகரசபைக் கமிஷனா சர்க்காரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த இரு வேண்டுதல்களுக்கும் அவசியமில்லையென்று சர்க்கார் கைவிரித்து விட்டது.

சர்க்கார் தாங்கள் பெறும் கேளிக்கை வரிவசூல் சதவிகிதத்தைக் குறைத்துக் கொண்டால், நகரசபைக்கு ஒவ்வொரு வருடமும் ஒன்றரை லட்ச ரூபாய்க்கு மேல் அதிக வருமானம் கிடைக்குமாம்.

சென்னை உணவு இலாக்கா ஒழிந்தது!

மந்திரி பதவியும் ரத்து

ஒரு லட்சம் டன் அரிசி டில்லிக்குப்போகும்

சென்னை, ஜூலை. 20—

சென்னை அரசாங்க உணவு இலாகா மந்திரிப் பதவி இன்றுடன் ரத்து செய்யப்பட்டு விட்டதாக மந்திரி சி. சுப்பிரமணியம் அறிவித்தார். எனவே, இதுவரை உணவு மந்திரியாக இருந்த திரு. சுப்பிரமணியம் இனி, நிதி, கல்வி, செய்தி, திட்டங்கள் ஆகிய இலாக்காக்ளுக்கு மந்திரியாக இருப்பார்.

தற்பொழுது உணவு நிலை மிகவும் திருப்திகரமாக இருப்பதின் காரணமாகவே, இப்பதவி ரத்து செய்யப் பட்டிருக்கிறது. இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் ஒரு லட்சம் டன் அரிசி உபரியாக உள்ளது. இந்த அரிசியை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டு, அவ்வப்போது ராஜ்யங்களுக்கு தேவைப்படும் போது சப்ளை செய்யும். மேலும் பர்மா அரிசி வேறு கையிருப்பு இருக்கும். தற்போது கையிருப்பில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் டன் அரிசி இருப்பு உள்ளது, இதில் நாற்பதினாயிரம் டன் அரிசியை நியாய விலைக் கடைகளுக்காக வைத்துக் கொண்டு, மீதி ஒருலட்சம் டன் அரிசியை மத்திய அரசாங்க சேமிப்புக்கு அனுப்பப்படும். இனி மேல் கொள் முதல் செய்வதற்கான அதிகாரமே அரசாங்கத்துக்குக் கிடையாது என்று திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

உணவு இலாகா ரத்து செய்யப்பட்டதின் விளைவாக அவ்விலாக்காவில் வேலை செய்து வந்தவர்களுக்கு, வேறு இலாக்காக்களில் வேலை கொடுக்கப்படும். இதனால் ஒருவர்கூட வேலையிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள் என அமைச்சர் கூறினர்.

எழுத்துரிமை, பேச்சுரிமை பாதுகாப்பு?

அரசியல் சட்டத்திருத்தம்!

இலட்சுமணபுரி, ஜூலை 20—

எழுத்துரிமை, பேச்சுரிமை சம்பந்தப்பட்ட அரசியல் சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்தியமைக்க 13 ராஜ்யங்கள் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மட்டரகமான பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவும், உரிமைகளை அமுல் நடத்த 'ஹேபியஸ் கார்ப்பஸ் முதலிய உத்தரவுகள் கொடுக்கும் வகையில் உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவும் தக்க திருத்தங்கள் ஏற்படுத்தவும் ராஜ்யங்கள் யோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது,

....

குரங்குகளுக்கு 'சான்ஸ்'!

தனி விமானத்தில் அமரிக்கப்பயனம்

கல்லத்தா, ஜூலை 20—

சுமார் ஆயிரம் குரங்குகள் தனி விமானமொன்றில் இன்று இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குப் பயணமாயின இக்குரங்குகள் அமரிக்காவில் சிறு :ள்ளை வாத நோய்பற்றின ஆராய்ச்சிகுப் பயன் படுத்தப் படுமாம்.

....

இரயில்வே அதிகாரி மரணம்

சென்னை, ஜூலை, 20—

தென்பகுதி ரயில்வே பிரதம ஆபரேட்டிங் சூப்பிரண்டு திரு. எஸ். ஆர் சர்மா நேற்றிரவு 9-15 மணிக்கு பெரம்பூர் ரயில்வே ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். அவருக்கு வயது 52.

சணல் பயிர் நாசம்

கௌஹாத்தி, ஜூலை 20—

அசாமில சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் ஏராளமான சணல் பயிர் நாசமடைந்துவிட்டதாகத் தெரிகிறது.

கோல்பாரா, தாராங், லக்சிம்பூர் முதலிய ஜில்லாக்களில் மட்டும் பதினேழாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் பயிரிடப்பட்ட சணல் வெள்ளத்தால் பாழாகிவிட்டதாக அதிகார வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பேரளம் புகை வண்டி நிலையத்தில் மறியல்

காரை போக்குவரத்து தடுக்கப்படுகிறது

பிரஞ்சிந்ய விடுதலை இயக்க அறப்போர்

நாகை, ஜூலை, 20—

இரயில் மூலம் பிரயாணிகளோ, ஏனைய பொருள்களோ காரைக்காலுக்குப் போவதைத் தடுப்பதென பிரஞ்சிந்திய விடுதலை இயக்கத்தினர் முடிவு செய்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. நேற்று முதல் பேரளம் புகை வண்டி நிலையத்தில் ஏராளமானத் தொண்டர்கள் மறியல் ஆரம்பித்து விட்டனர். காரை செல்லும் பார்சல்கள் தடுக்கப் படுகின்றன. போலீசார் ஜரூராகக் கவனித்து வருகின்றனர்,

தொழிலாளர் சம்பளவெட்டு!

மணி முத்தாறு அணையில் வேலை நிறுத்தும்

அம்பாசமுத்திரம் ஜூலை. 20—

மணிமுத்தாறு அணைத்திட்டத்தில் காண்டிராக்ட் பகுதிகளில் வேலை செய்துவரும் மூவாயிரம் தொழிலாளர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன் 30 கன அடி சுவருக்கு காண்டிராக்ட் கூலி ரூ. 15 ஆக இருந்ததை ரூ. 14 ஆக சர்க்கார் உத்தரவு வருமுன்பே காண்டிராக்டர்கள் குறைத்து கணக்கு தீர்த்தனராம். இதை எதிர்த்துத் தான் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

அதிகாரிகள் தலையிட்டு தொழிலாளர்கட்கும் காண்டிராக்டர்களுக்கும் இடையே சமரசம் செய்யப் பாடுபட்டுவருவதாகத் தெரிகிறது.

காமராஜரை ஆதரியுங்கள்!

பி. டி. இராஜன் வேண்டுதல்

மதுரை, ஜூலை. 20—

குடியாத்தம் தொகுதி உபதேர்தலில் முதன் மந்திரி காமராஜரை ஆதரிக்கும்படி வேண்டிக் கொண்டு திரு. பி. டி. இராஜன் அவர்கள் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

....

நேருவிட்ட வழி?

சிவஞானம் காத்திருப்பாராம்!

சென்னை, ஜூலை, 20—

சென்னை, காங்கிரஸ் கமிட்டி தமிழரசுக்கழகத்தைக் கலைக்கும்படி கொடுத்துள்ள தவணை குறித்து நேருவுக்கு சிவஞானம் கடிதம் எழுதியிருப்பதாயும், நேருவிட்ட வழியாகட்டும் என்று தாம் காத்திருக்கப் போவதாகவும் தெரிவித்தாராம்.

புற்று நோய்க்கு பச்சிலை வைத்தியம்!

நைரோவி, ஜூலை, 20—

ஆப்பிரிக்காவில் தங்க நியாகா பகுதிகளில் காணப்படும் ஒரு வகை பச்சிலையால் புற்று நோய் குணமாகும் என்று தெரிகிறதாம்.

இலண்டன் ராயல் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத்தார் இப்பச்சிலையை சோதனை செய்து வருவதாகத் தெரிகிறது.

ஆந்திராவில் வியாபாரக் கணக்குகள் !

தமிழ், கன்னடம், மலையாளத்திற்கும் அனுமதி

கர்நூல், ஜூலை. 20—

ஆந்திராவிலுள்ள வியாபாரிகள் தங்கள் கணக்குகளை தமிழ், கன்னடம், மலையாளம் முதலிய எந்த மொழிகளிலும் எழுதலாம் என்று ஆந்திர அரசாங்கம் அறிக்கை விடுத்துள்ளது.

இந்த மாற்றத்திற்கு மாறுக உள்ள உத்தரவுகள் அனைத்தும் நீக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

பொதிசுமக்க புதிய வழி

இயந்திரக் கோவேறுகழுதை

அபர்டீன் மேரிலாந்து. ஜூலை. 20—

இராணுவத் தளவாடப் பொதிகளைச் சுமந்து செல்ல இப்போது புதிய இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டு வருகிறது. பொதிசுமக்கப் பயன்படும் கோவேறுகழுதையின் வேலையை புதிய 'இயந்திரக் கோவேறுகழுதை', செய்யுமாம்.

லாரி போன்ற இந்த இயந்திரக் கோவேறு கழுதை 1000 ராத்தல் பளு ஏற்றலாமாம். இதன் எடை 750-ராத்தல்களே இதன் நீளம் 100-அங் அகலம் 46-அங் உயரம் 27 அங்குலமாகும்.

இதனைச்சுலபமாகத் தலைகீழாகக்கவிழ்த்து பழுது பார்க்க முடியுமாம்.

ரயில் கட்டணம் குறையாது

ரயில்வே மந்திரி அறிவிப்பு

ஆக்ரா, ஜூலை. 19—

ரயில்வே பிரயாண, சாமான் கட்டணங்களை இப்போது குறைக்க முடியாது என்று ரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி நேற்று தெரிவித்தார்.

ரயில்வேக்களை பழுது பார்க்கவும், வசதிகளைப் பெருக்கவும் பணம் செலவாகி விடுகிறதென்று அவர் குறிப்பிட்டார். போக்குவரத்துகளில் ஏற்படும் கஷ்டங்களையும், இடவசதி பற்றிய குறைகளையும் கவனிப்பதாகக் கூறினர்.

விவசாய வருமான வரி

நகல் மசோதா ஆலோசனை

சென்னை, ஜூலை. 19—

சென்னை மந்திரிகள் கனம், சுப்பிரமண்யம், பக்தவத்சலம், மாணிக்கவேலு நாய்க்கர் ஆகியோர் கூடி விவசாய வருமான வரி விதிப்பு பற்றிய நகல் மசோதாவைப் பரிசீலனை செய்தனர்,

விவசாய வருமான வரிமூலம் ரூபாய் எழு லட்சத்தில் இருந்து, பன்னிரண்டு இலட்சம் ரூபாய் வரை வருமானம் எதிர்ப்பார்க்கப் படுகிறதாம்.

இந்த வரி விதிப்பு மொத்த வருமானம் ரூ. 3000-க்கும் அதற்கு மேலும் கிடைக்கும் நிலங்களுக்கும் அல்லது நிகர லாபம் ரூ. 1500-ம் அதற்கு மேலும் கிடைக்கும் நிலங்கட்கும் விதிக்கப் படலாம் எனவும் தெரிய வருகிறது

விற்பனையாகிறது!

—o—

அண்ணாவின் அன்புப்படையல்

ஜூலை 15

(இருவர்ண அட்டை)

விலை அணா 4

எல்லா பத்திரிகைக் கடைகளிலும் கிடைக்கும்.

தேவை

பத்திரிகை ஆபீஸ் அனுபவமுள்ள தமிழ் கம்பாஸிட்டர்கள் தேவை. விவரங்கட்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

பொறுப்பாளர்

விதவை (கலப்பு) திருமணம்

......

சென்னை, ஜூலை, 21—

ஏழுகிணறு (9 வது வட்டம்) தியாகராய பிள்ளை வீதி 40-வது இல்லத்தில் தோழர் குப்புசாமிக்கும் தோழியர், சரோஜினி அம்மைக்கும் நேற்று மாலை மேணியளவில் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் தலைமையில் திருமணமும், தோழர் கரிகாலன் தலைமையில் பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள், பாவலர் அப்துல்காதர், கவிஞர் சுரதா, எ. எஸ். வேணு கலைச்செழியன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

வெளிநாட்டு மதுவகைக்கு யோகம்!

ஆந்திராவில் தாராள அனுமதி

கர்நூல். ஜூலை 20—

வெளிநாட்டு மது வகைகளைக் குடிக்க டாக்டர்களின் அத்தாட்சி இல்லாமலேயே ஆந்திராவில் அனுமதி தரப்படும் என்று சட்டமந்திரி டி. விஸ்வநாதம் அறிவித்துள்ளார்.

டாக்டர்கள் அத்தாட்சி இல்லாமலேயே வெளிநாட்டு மது வகைகட்கு அனுமதி வழங்கலாமென்று ராமமூர்த்தி கமிட்டி சிபார்சு செய்திருந்தது.

குடிவகைக்கான அனுமதிக் கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டுள்ள தாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

இலவச 'ஜீப்' போக்குவரத்து

மணிலாவில் ஆரம்பம்

மணிலா, ஜூலை, 20—

மணிலாவில் பஸ், டிராம் ஆகிய எவையுமே கிடையாதாம். இவைகளுக்குப் பதில் 'ஜீப்லைன்' போக்குவரத்து இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்

ஜீப்கார்கள், பத்துப் பேர்கள் சுகமாக உட்காரும்படி மாற்றியமைக்கப் பட்டுள்ளன. அவைகளுக்குக் கட்டணமே கிடையாதாம், பிரயாணம் செய்து கொண்டே ரேடியோ கேட்கும் வசதியும் இருப்பதாகத் தெரிகிறது,

....

போலந்து சர்க்கரை

சென்னையில் இறக்குமதி

சென்னை ஜூலை. 19—

இன்று சென்னை துறைமுகத்தில் போலந்திலிருந்து சுமார் 9500 டன் சர்க்கரை இறக்குமதியாகியுள்ளது,

இதில் 3000 டன் சர்க்கரை சென்னைக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிகிறது. மீதி சர்க்கரை விசாகப்பட்டணத்திற்கு ஏற்றுமதியாகும்.

இந்த சர்க்கரை வியாபாரிகட்கு மணங்கு ரூ. 29-0-0வீதம் தரப்படுமாம்.

ஆலயங்களில் தீண்டாதார் நுழைவு

தடுக்க சட்டம் தேவையாம்

......

மனிதனுக்குத் தடை; பசுவுக்குப் பாதுகாப்பு

....

காசி ஜூலை, 30—

ஆலயங்களில் தீண்டாதார் நுழைவதைச் சட்ட பூர்வமாகத் தடுக்க வேண்டும் என்று காசியில் கூடிய ராமராஜ்ய பரிஷத் மகாநாடு வற்புறுத்தியுள்ளது.

மனிதர்களை கோவிலுக்குள் நுழைவதைத் தடுக்கச் சட்டம் தேடும் இந்த மாநாட்டில் பசுவின் மீது மட்டும் பக்திகொண்டு பசுவின் மீது மட்டும் பக்தி பசுவதைத் தடுப்பு தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனா,

கி. வங்கத்தில் 69 பேர் கைது

கவர்னர் ஆட்சியின் எதிரொலி

சிட்டாகாங், ஜூலை, 20—

கிழக்கு வங்காளத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இதுவரை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 69 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

....

டிட்டாகர் காகிதமில் வேலை நிறுத்தம்

முதலாளிகள் கதவடைப்பு

கல்கத்தா, ஜூலை. 20—

கோக்பூர் அருகில் உள்ள டிட்டாகர்க்காகிதமில் தொழிலாளர் சிலரைச் சில தினங்களுக்கு முன் கண்டிராக்டர் அடித்து விட்டதற்காக அந்தக் கண்டிராக்டரை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்று 3500 தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனா.

வேலை நிறுத்தம் கடந்த வியாழனிலிருந்து தொடங்கியது. முதலாளிகள் மறு தினம் கதவடைப்பு செய்திருப்பதாக அறிவித்து விட்டனர். வேலை நிறுத்தம் தொடர்கிறதாம்,

மானாமதுரை ஓட்டுத்தொழிற்சாலை

மீண்டும் வேலை ஆரம்பம்

சிவகங்கை ஜூலை 20—

மானாமதுரையிலுள்ள கௌரி ஓட்டுத் தொழிற்சாலை ஆறு மாதங்கட்குப் பிறகு மீண்டும் வேலை செய்யத்தொடங்கியுள்ளதாம் தொழிலாளர்கள் வழக்கம் போல் வேலை செய்து வருகிறார்களாம்.

....

கரும்பு ஆராய்ச்சிக் குழு

புதுடெல்லி. ஜூலை, 18—

கரும்பு ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையங்களைத் தையும் சுற்றிப் பார்த்து, அவற்றில் நடைபெறும் வேலைகளை ஆராய்ந்து, தேவையானால் திருத்தியமைக்கவும் வகை செய்யும் நிமித்தமும், பார்லிமெண்டு உறுப்பினர் லால்சிங்கைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை, மத்திய கரும்புக் கமிட்டி அமைத்திருக்கிறது.

திருமதி, எம். ராஜம் அவர்களுக்குச் சொந்தமான மெர்கண்டைல் அச்சகத்தில் திரு. டி. பி. சுப்பிரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2-45 முத்து மாரிச்செட்டித்தெரு, சென்னையில் வெளியிடப்பட்டது.